**தலைப்பு 248 - இலங்கை மது வரித் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை மது வரித் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை மது வரி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை மது வரி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்தாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை மது வரி திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைவழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார்ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட கருத்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதி கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காமை**

அரச கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 06 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதும் அத்தேவைப்பாடுகளிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் படிவங்களின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்கள் தொகுதியில் சிங்களப் பிரதியில் 10 சந்தர்ப்பங்களிலும் ஆங்கில பிரதிகளில் 6 சந்தர்ப்பங்களிலும் தமிழ் பிரதிகளில் 8 சந்தர்ப்பங்களிலும் நிரல்களின் பெறுமதி மாற்றி பதிவு செய்திருந்தமை, நிரல்களின் கூட்டுத்தொகை தவறுதலாக பதிவு செய்திருந்தமை மற்றும் பெறுமதிகள் பதிவு செய்யப்படாதிருந்தமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | எதிர்காலத்தில் கணக்குகளை தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்குமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக | உரிய வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6.2 நிதி செயலாற்றல் கூற்று

### வருமான பெறுவனவு

திணைக்களத்திற்குரிய வருமானங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை - |
| --- | --- | --- |
| (அ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்ககளின் பிரகாரம் புகையிலை வரி வருமானம் ரூபா 38,565,392 ஆக இருந்த போதும் திணைக்களத்தின் வருமான பிரிவினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் புகையிலை வரி வருமானம் ரூபா 32,140,567 ஆக இருந்தமையால் ரூபா 6,424,825 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | புகையிலை வரி பிரிவு வருமானங்களை அறிக்கையிடும் போது தொடர்புடைய காலத்திற்கான அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானத்தை குறிக்கிறது. இருப்பினும், கணக்குப் பிரிவு, வருமானத்தைப் அறிக்கையிடும் போது, தொடர்புடைய காலத்திற்கு மொத்தமாக பெறப்பட்ட மொத்த வருமானத்தைக் குறிப்பிடுகிறது. இதன் விளைவாக, இந்த அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள வருமானம் வேறுபடக் கூடுமென தெரிவிக்கிறேன். | வருமானங்களை குறிப்பிடும் போது கணக்குப் பிரிவிற்கும் வருமானப் பிரிவிற்கும் இடையே தகவல் ஒப்பிடப்பட்டு சரியான பெறுமதி கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டும் . |

## 1.6.3 நிதி நிலைமைக் கூற்று

### (அ) மூலதனச் செலவினம்

திணைக்களத்திற்குரிய வருமானங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (i) திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் நிர்மாணங்களிற்காக மதியுரைச் சேவைகளை | தலைமை அலுவலக கட்டிடத்தின் குறைபாடுகளை தயாரித்து | ஒப்பந்த மதியுரை சேவைகளுக்கு உரிய சேவைகளை வழங்கும் உடன்படிக்கையின் |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கியிருந்த கட்டிடத் திணைக்களத்திற்குரிய மதியுரைக் கட்டணங்கள் செலவினமான ரூபா 7,286,343 தொகை 248-1-1-2104 ஆம் இலக்க செலவின விடயத்தில் நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அதற்குரிய 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிய 194890 ஆம் இலக்க காசோலையை அந்நிறுவனத் திற்கு கையளிக்காமல் மூன்ற மாதத்திற்கு மேற்பட்ட காலமாக எவ்வித காரணமொன்றும் குறிப்பிடாமல் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | கையளித்தல் மற்றும் வடிமைப்பு வழங்குதல் தொடர்பாக செய்யப்பட்ட வேண்டு கோள்களுக்கு இதுவரை நல்ல பொறுப்பேற்றலொன்று தெரிவிக்காமையால் இக்காசோலை இரத்துச் செய்யப்பட்டு ஏப்ரல் மாத கணக்கீட்டு பொழிப்பு மூலம் அரசின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது. | பிரகாரம் முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளதா எனப் பரீட்சித்து கொடுப்பனவு செய்யும் போது நி.பி 136 – 139 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் 2 மூலதனச் செலவினங்களின் கூட்டுத் தொகை ரூபா 85,800 ஆன மீண்டெழும் செலவினமாக பொறுப்புக்கள் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருந்தது | தவறுதலாக பொறுப்புக்கள் பதிவேட்டில் மீண்டெழும் செலவினமாக காண்பிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் அட்டவணைகளில் தகவல்களை தெரிவிக்கும் போது சரியாக காண்பிக்கப்பட வேண்டும். |

**(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| i. | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் (SA-80) திறைசேரி அச்சீட்டுப் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 1,458,163,820 ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 1,458,969,403 ஆக இருந்தமையால் ரூபா 805,583 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | திணைக்கள புத்தகங்களின் பெறுமதி சரியானதாகும். திறைசேரி அச்சிடல் கூற்றின் பிரகாரம் மீதி மற்றும் திணைக்கள புத்தகங்களுக்கு இடையே UP LOARD செய்யும் போது ஏற்பட்ட தவறொன்று காரணமாகவே வேறுபாடு ஏற்பட்டிருந்தது. எதிர்வரும் காலங்களில் அதனை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் ஏ.சீ.ஏ.2(ii) படிவத்தில் 248-1-1-2104 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் கட்டிட நிமாணத்திற்காக திணைக்களம் மற்றும் ஏனைய திணைக்களங்களினால் செலவிடப்பட்ட செலவினங்கள் முறையே ரூபா 30,055,474 மற்றும் ரூபா 42,895,034 ஆக இருந்த போதும் ஏ.சீ.ஏ. 6 நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் மீளாய்வாண்டில் அலுவலக கட்டிடங்களை கையேற்றல் ரூபா 30,055,474 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 42,895,034 பெறுமதியான கட்டிடங்கள் கையேற்றல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏனைய திணைக்களங்களுக் வழங்கப்பட்ட நிதிஏற்பாடு களிலிருந்து செலவினம் இவ்வாறு சொத்துக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது இச்செலவினம் தொடர்பாக முழுமையான அறிக்கையொன்று கட்டிடத் திணைக்களத்திடமிருந்து கோரப்பட்டுள்ளது. அது கிடைத்தவுடன் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் சொத்துக்களாக கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (iii) | மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ஏ.சீ.ஏ 6 படிவத்தின் பிரகாரம் நடை முறைவேலைகளின் பெறுமதியாக 2019 சனவரி 01 இல் உள்ளவாறு நடைமுறை வேலைகளின் பெறுமதியாக அறிக்கையிடப் பட்டிருந்த ரூபா 165,062,650 ஆன மீதி அவ்வாறே காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் நடை முறைவேலைகளின் பெறுமதியான ரூபா 45,567,771 ஏ.சீ.ஏ.6 படிவத்தில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது கட்டிடத் திணைக்களத்திடமிருந்து 2019 ஆம் ஆண்டின் செலவினங்களை மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாக அறிக்கையொன்று கோரப்பட்டுள்ளதுடன் அது கிடைக்கப் பெற்றதன் பின்னர் நடை முறைவேலைகளின் கீழ் சொத்துக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | - மேற்படி - |

### 1.6.4 வைப்புக்கள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய வைப்புக் கொடுப்பனவுகள் மற்றும் மீதிகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் தலைமை அலுவலகத்தின் நிர்மாணத்திற்காக ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 9,946,304 தொகையான பிடிகாசு வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. கட்டிடத்தின் நிமாணம் மற்றும் திட்டங்கள் முறையாக கையளிக்காமை, நிர்மாணங்களில் தவறுகள் காணப்பட்டமை மற்றும் ஒப்பந்தத்தை மேற்பார்வை செய்த நிறுவனத்தினால் அதற்காக முறையான நடவடிக்கை எடுக்காமை போன்ற சிக்கல்கள் இதற்கான காரணங்களாக இருந்தன. இச்சிக்கல்களை தீர்வு செய்வதற்கு கணக்குகளில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத்தவறுகள் மற்றும் குறைபாடுகள் என்பவற்றை பூர்த்தி செய்து தருமாறு கட்டிடத்தின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் என்பற்றை முறையாக கையளிக்குமாறு பல சந்தர்ப்பங்களில் கோரப்பட்ட போதும் திருப்திகரமான பொறுப்பேற்றலொன்று கிடைக்காமை காரணமாக இப்பணத்தை ஏப்ரல் கணக்கு பொழிப்பின் மூலம் அரசின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டது. | ஒப்பந்தக்காரர் மற்றும் மதியுரை நிறுவனத்துடன் திணைக்களம் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் சிக்கல்களைத் தீர்வுசெய்து கணக்குகளில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும். |

**1.6.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

திணைக்களத்தால் கீழே தரப்பட்டுள்ள சில ஏடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில ஏடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு<br>1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை / நிதிப்பிரமாணம் 502 (2) இன் பிரகாரம் அதன் II ஆவது பின்னிணைப்பிற்கு இணங்க நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நாளதுவரையாக பேணிச் செல்லப்படும். | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை / நிதிப்பிரமாணம் 502(2) இன் பிரகாரம் அதன் II ஆவது பின்னிணைப்பிற்கு இணங்க நிலையான சொத்துக்கள் பதிவேடு உரிய முறையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கப்பாட்டுடன் பேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) | ஆளுக்குரிய வேதனப் பதிவேடு<br>நிதிப் பிரமாணம் 453 இன் பிரகாரம் ஆளுக்குரிய வேதனப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. | ஆளுக்குரிய வேதனப் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டு வருகின்றது | நிதிப்பிரமாணம் 453 இன் பிரகாரம் 17 ஆம் திறைசேரி மற்றும் கணனி மாதிரியின் பிரகாரம் ஆளுக்குரிய வேதனப் பதிவேடு பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திணைக்கள ஒதுக்கீட்டு (வாக்குப் பண) பேரேடு<br>நிதிப் பிரமாணம் 447 இன் பிரகாரம் திணைக்கள ஒதுக்கீட்டு (வாக்குப் பண) பேரேடு பேணப்பட்டிருக்கவில்லை. | திணைக்கள ஒதுக்கீட்டு (வாக்குப் பண) பேரேடு நாளதுவரையாக பேணப்பட்டு வருகின்றது் | நிதிப் பிரமாணம் 447 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் உள்ளடங்கும் வகையில் 138 ஆவது பொது படிவத்தின் பிரகாரம் திணைக்கள ஒதுக்கீட்டு (வாக்குப் பண) பேரேடு நாளதுவரையாக பேணப்பட வேண்டும் |
| (ஈ) | பிணை பதிவேடு<br><br>நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பிணை பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிட்டுள்ள தகவல்கள் உள்ளடக்கப்படும் வகையில் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணை பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (உ) | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு<br><br>நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.᠅. | எதிர்காலத்தில் நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்படும் | நிதிப்பிரமாணம் 110 ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழ் வரும் படிவத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 6000-0-0-18-0-122 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான ரூபா 73,346,404 ஆன வைப்புக்களுக்காக அட்டவணையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை 6000-0-0-18-0-122 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கிற்குரிய அடடவணை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பெறுமானங்களுக்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரிக்கு தீர்வுசெய்யப்படாத ரூபா 43,437,909 ஆன கட்டுநிதி மீதியில் ரூபா 25,273,363 தொகை 2021 மார்ச் மாதம் தீர்வுசெய்யப்படவில்லை | 7041629 கணக்கு திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 25,273,363 தொகை மார்ச் மாதத்தில் மாற்று பத்திரத்தின் மூலம் 2021 கட்டுநிதிக் கணக்கிற்கு கையேற்கப்பட்டு 2020 கட்டுநிதிக் கணக்கு தீர்வுசெய்யப்பட்டது. | அரச கணக்குகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 முற்பணக் கணக்கு மீதிகள்

முற்பணக் கணக்குகளில் ஆண்டின் இறுதியல் மீதிகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மரணித்த 09 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை கடன் மீதி ரூபா 1,636,743 ஆக இருந்ததுடன் அதில் ஒரு உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 118,260 ஆன நிலுவை மீதியொன்று 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்தது. | விரைவில் இம்மீதிகைளை அறவிடுவதறங்கு தேவையான நடவடிக்கைகளை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிலுவை கடன் மீதி தாபன விதிக் கோவையின் XLIV ஆம் அத்தியாயத்தின் பிரகாரமும் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | சேவையிலிருந்து நீக்கப்பட்ட கேட்டு விலகிய சேவையை விட்டுச் சென்ற 11 ஊழியர்களிடமிருந்து ரூபா 1,157,797 ஆன கடன் மீதிகள் காணப்பட்டதுடன் அதில் 07 உத்தியோகத்தர் களிடமிருந்து மொத்தம் ரூபா 543,723 ஆன நிலுவை மீதியொன்று 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருந்தது. | சேவையிலிருந்து நீக்கப்பட்ட கேட்டு விலகிய சேவையை விட்டுச் சென்ற ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன்மீதிகளை விரைவில் அறிவடுதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (இ) | மேலே குறிப்பிட்டதன் பிரகாரம் உத்தியோகத்தர் களிடமிருந்து அறவீடு செய்ய வேண்டிய கடன்களை அறவிடுவதற்காக தாபன விதிக் கோவையின் XLIV ஆம் அத்தியாயத்தின் பிரகாரமும் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்காதிருந்தமை மற்றும் அது தொடர்பான பின்தொடர் நடிக்கை பலவீனமான மட்டத்தில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | தாபன விதிக் கோவையின் XLIV பிரகாரமும் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரமும் நிலுவை மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் | - மேற்படி - |

## 2.3 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்கள் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கைகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதுபானம், கள்ளு மற்றும் ஸ்பிரிட் உற்பத்திக்காக திணைக்களத்திற்கு பெறவேண்டிய மொத்த நிலுவை வரி வருமானம் ரூபா 3,969.8 மில்லியனாகும். நி.பி. 128(1)(ஏ) மற்றும் 128(2)(உ) இன் பிரகாரம் நிலுவை வருமானங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய நிலுவை மதுவரி மற்றும் தாமதக் கட்டணங்களை அறவீடு செய்வதற்காக செலுத்த வேண்டிய நிறுவனங்களுடன் கலந்துரையாடுவதற்கும் அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வதற்கும் இத் திணைக்கள உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமனம் செய்வதன் மூலம் நிலுவை மதுவரி மற்றும் தாமதக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நி.பி. 128(1)(ஏ), 128(2)(இ) மற்றும் (உ) இன் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 5 மதுபான உற்பத்தி கம்பனிகளிற்கான 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட நிலுவை வரி வருமானம் ரூபா 2,299.63 மில்லியனாகும். அதில் உள்ளடக்கப்பட்ட அடிப்படை வரி ரூபா 360.61 மில்லியன் தொகையானதுடன் தாமதக் கட்டணம் ரூபா 1,939.02 மில்லியன் தொகையாகும். 2 கம்பனிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,217.12 மில்லியன் கூட்டுமொத்தமான நிலுவை வருமானத்திற்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்காததுடன் ரூபா 204.97 மில்லியன் நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டியிருந்த கம்பனிக்கு | இலங்கை மதுவரி திணைக்களத்தில் 2020.12.31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை மதுவரி மற்றும் அதற்கிணங்க கணிப்பீடு செய்யப்பட்ட தாமதக் கட்டணம் தொடர்பாகவும் நிலுவை மதுவரி மற்றும் தாமத கட்டணங்களை அறவீடு செய்யும் செயன்முன்னேற்றம் தொடர்பாகவும் மேற்படி 2.1(அ) பதில் ஊடாக பின்னிணைப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நி.பி. 128(1)(ஏ), 128(2)(இ) மற்றும் (உ) இன் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆறுதல் அளிப்பதற்கு திணைக்களத்துடன் பரஸ்பர உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. ஏனைய இரண்டு கம்பனிகளின் ரூபா 877.54 மில்லியன் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வது தொடர்பாக செயன்முன்னேற்றம் எதுவும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | நி.பி. 128(2)(இ) இன் பிரகாரம் நிலுவை வருமானம் தொடர்பான நிலைமையை காட்டுகின்ற அரையாண்டு அறிக்கையொன்று ஒவ்வொரு ஆறு மாதங்களிற்கு ஒரு முறை அரையாண்டின் இறுதியை தொடர்ந்து வரும் மாதத்தின் இறுதி நாளில் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 கடைசி அரையாண்டிற்கான அறிக்கை 2021 சனவரி 31 வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமான அறிக்கை தற்போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பொறுப்பான உத்தியோகத்தர்களின் இடமாற்றத்தில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக இந்த ஆண்டு நிலுவை வருமான அறிக்கையை சமர்ப்பிப்பதில் தாமதம் காணப்பட்டதென்பதை ஒப்புக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் அவ்வாறு இடம்பெறாதிருப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நி.பி. 128(2)(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட மதுவரி வருமானம் ரூபா 130 பில்லியன் உடன் ஒப்பிடும் போது திணைக்களத்தால் சேகரிக்கப்பட்ட வருமானம் (நிலுவை வருமானம் உள்ளடங்கலாக) ரூபா 120.9 பில்லியனாகும். இது மதிப்பிடப்பட்ட மதுவரி வருமானத்தில் 93.07 சதவீதமாகும். | 2020 ஆம் ஆண்டின் போது உலகம் முழுவதும் கொவிட் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டமை அனைவரும் அறிந்த உண்மையாகும். அதன் பிரகாரம் 2020 மார்ச் மாதத்தின் போதும் அதன் பின்னரும் நாட்டில் நிலவிய மோசமான சுகாதார நிலைமைகள் காரணமாக தொழிற்சாலைகள் மூடப்பட்டதாலும் விற்பனை குறைந்துள்ளதாலும் இவ் இலக்குகளை அடைந்துகொள்ள முடியாதிருந்தது என்பதை | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| | நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எனினும் ஏனைய வருமானம் ஈட்டும் அனைத்து அரச நிறுவனங்களிலும் வருமானம் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட போதிலும் இத் திணைக்களம் 93.07% அதிக தொகையை அறிக்கையிட்டுள்ளது. | |

## 2.4 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 07 செலவின விடயங்களிற்காக ரூபா 116.6 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அச் செலவின விடயங்களிற்குரியதாக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 83.8 மில்லியன் கூட்டுமொத்தம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அச் செலவின விடயங்களிலுள்ள சேமிப்பானது மேற்கொள்ளப்பட்ட தேறிய நிதியேற்பாடுகளில் 17 சதவீதம் தொடக்கம் 92 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன. | 2020 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் தொடக்கம் நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமையை எதிர்கொள்ளும் போது திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை அதே வகையில் நிறைவேற்ற முடியாதிருந்தமையால் சுட்டிக்காட்டப்பட்ட விச்சில் நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. | நி.பி. 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீட்டை தயாரித்தல். |
| (ஆ) வரிக் கணிப்பீட்டு செயன்முறையை சீர்செய்வதற்காக கணனி மென்பொருள் முறைமையொன்றை நிறுவுவதற்கு மீளாய்வாண்டின் போது செலவின விடயம் 248-1-1-2106 இன் கீழ் காணப்பட்ட ரூபா 15 மில்லியன் நிதியேற்பாட்டில் ரூபா 3.4 மில்லியன் தொகை தடையில்லாமல் மின்சாரம் வழங்கும் இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. மிகுதி ரூபா 11.6 மில்லியன் நிதியேற்பாடு நி.பி. 66 இன் கீழ் 248-1-1-2108 ஆம் இலக்க செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | கணனி மென்பொருள் முறைமையை நிறுவும் செயன்முறை பூர்த்திசெய்யப்படாததால் அதற்கான கொடுப்பனவிற்குரிய உறுதிச்சீட்டு கிடைக்காததால் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் சேமிக்கப்பட்ட நிதியேற்பாட்டு தொகை 248-1-1-0-2108 ஆம் இலக்க செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டை உரிய நோக்கத்திற்கு சரியாக பயன்படுத்த வேண்டும். |

## 2.5 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செலவினத் தலைப்பு 130 இற்குரிய தலைமை அலுவலகம் மற்றும் 2 மாவட்டங்களிற்கு இணைக்கப்பட்ட பயிற்சியாளர்களிற்கு செலுத்த வேண்டிய ரூபா 420,000 படி மதுவரி திணைக்கத்தின் செலவினத் தலைப்பு 248 இன் கீழ் பொறுப்புக்களாக குறிப்பிடப்பட்டிருந்தது. | தவறொன்றின் காரணமாக பொறுப்பு பட்டியலை தயாரிக்கும் போது செலவினத் தலைப்பு 248 இன் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக கொடுப்பனவு செய்யும் போது செலவினத் தலைப்பு 130 இன் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் வழிகாட்டல் 05/2020 இன் பிரகாரம் செயற்படுதல். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான 12 செலவின விடயங்களிற்குரிய ரூபா 1,226,942 கூட்டுமொத்தமான 22 பொறுப்புக்களானது பொறுப்புக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக சுட்டிக்காட்டப்பட்ட 22 பொறுப்புக்களானது பொறுப்புக்கள் பதிவேட்டை தயாரிக்கும் போது உள்ளடக்கப்பட முடியாதிருந்தது. எதிர்காலத்தில் பொறுப்புக்கள் பதிவேட்டினை சரியாக தயாரிக்கும் முறை தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்பு இல. (iii) இன் கீழ் அறிக்கையிடப்படாத பொறுப்பு அல்லது கடப்பாடு முன்னைய ஆண்டின் செலவினமொன்றாக அடுத்த ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்படக்கூடாத போதிலும் 2019 ஆம் ஆண்டின் போது அவ்வாறு அறிக்கையிடப்படாத 15 சந்தர்ப்பங்களிற்குரிய ரூபா | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு பொறுப்புக்கள் பட்டியலை தயாரிக்கும் முறை தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுதல். |

| | | | |
|---|---|---|---|
| | 4,898,437 கூட்டுமொத்தம் மீளாய்வாண்டின் போது தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. | | |
| (ஈ) | எதிர்வரும் ஆண்டிற்காக செலுத்தப்பட வேண்டிய 5 செலவினங்களிற்குரிய ரூபா 127,023 கூட்டுமொத்தம் மீளாய்வாண்டின் பொறுப்புக்கள் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. | தவறுதலாக இது ஏற்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதிருப்பதற்கான நடவடிக்கையை எடுப்பதற்காக குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது | அரச கணக்குகள் வழிகாட்டல் 05/2020 இன் பிரகாரம் செயற்படுதல். |

## 2.6 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்த வேண்டியிருந்த போதும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | திணைக்களம் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை தயாரித்து பேணி வருகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுப்படுத்த வேண்டியுள்ளதுடன் அம்முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமெனவும் அம்மீளாய்வினை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டமை தொடர்பான கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தினுள் சிறந்த நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையுடன் திணைக்களம் சிறப்பாக முகாமை செய்யப்படுகின்றதுடன் 2020 ஆம் ஆண்டிற்காக அதில் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு எழுத்து மூலமான கூற்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை நான் ஒப்புக்கொள்கின்றேன்.<br><br>எனினும் 2021 ஆம் ஆண்டிற்காக தேவையான சந்தர்ப்பங்களின் போது காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்படுவதுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட வேண்டிய எழுத்து மூலமான கூற்று ஏற்கனவே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் தேவைப்படுத்தப்பட்டவாறு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிகளினுள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களிற்கும் பதிலளிக்கப்பட்டிருப்பதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த 06 கணக்காய்வு ஐயவினாக்களில் 04 தொழிற்சாலைகளின் உற்பத்தி தொடர்பாக அனுப்பி வைக்கப் பட்டிருந்தது. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்காக அனைத்து உத்தியோகத்தர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். தற்போது பதில்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அவை மிக விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | -மேற்படி- |
| (இ) | உள்ளகக் கணக்காய்வு தொழிற்பாடு சரியாக செயற்படுவதற்காக செயற்திறனான முறைமையொன்று உள்ளதென்பதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 5.1 ஆம் பந்தியிலுள்ள அவதானிப்புக்களின் பிரகாரம் அத் தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | மேற்குறிப்பிடப்பட்டவற்றை கருத்தில் கொண்டு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையில் ஏற்கனவேயுள்ள குறைபாடுகளை சீர்செய்வதற்கும் நிதிச் செயற்பாட்டு செயலாற்றலில் ஏற்கனவேயுள்ள குறைபாடுகளை சீர்செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

**2.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| அவதானிப்புக்கள் - சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | அவதானிப்புக்கள் - இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | | |
| (i) நி.பி. 104(4) | சேதங்கள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களிற்கு அதிகமான காலதாமதமொன்று ஏற்பட்டால் நிதிப் பிரமாணம் 104(07) இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கையொன்றும் நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் சேதங்கள் ஏற்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் முழுமையான அறிக்கையொன்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 748,907 கூட்டுமொத்தமான நட்டங்கள் தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காத 05 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | அனைத்துக் குறைபாடுகள் மற்றும் தவறுகளை முறைமையொன்றாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை உருவாக்கி சீர்செய்ய எதிர்பார்க்கின்றதுடன் மேலதிக உள்ளக சுற்றறிக்கைகள் தயாரிக்கப்பட்டு விரைவாக உத்தியோகத்தர்களிற்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | நி.பி. 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) நி.பி. 395(இ) | ஒவ்வொரு மாதத்தினதும் கொடுக்கல் வாங்கல் நிலைமை தொடர்பாக தொடர்ந்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் | நாளதுவரை இரண்டு வங்கிக் கணக்குகளிற்கு உரிய வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு இறுதியாக்கப்பட்டிருக்க வில்லை. | நி.பி. 395(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீளாய்வாண்டின் 2 வங்கிக் கணக்குகளிற்குரிய 5 இணக்கக்கூற்றுக்கள் கணக்காய்வுத் திகதியான 2021 சனவரி 20 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2015 யூலை 20 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசிறை கொள்கை சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி | மதுவரி ஆணையாளர் நாயகம் வருமான குறியீடுகள் தொடர்பான மாதாந்த அறிக்கைகளை அடுத்த மாதத்தின் 10 ஆம் திகதிக்கு முன்னர் அரசிறைக் கொள்கை பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2015 யூலை 20 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசிறை கொள்கை சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது வருமானக் குறியீடுகளிற்கிணங்க மாதாந்த வருமான அறிக்கைகள் அரசிறைக் கொள்கை திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் திறைசேரியின் மாதாந்த கணக்குகளை பெற்ற பின்னரே இவ் அறிக்கை தயாரிக்கப்படுகின்றது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். |
| **(இ)** | **அரச நிதிச் சுற்றறிக்கை** | | | |
| | (i) 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட ரூபா 130 பில்லியன் மதுபான வரி வருமானம் மற்றும் ரூபா 35 மில்லியன் புகையிலை வரி வருமானம் தொடர்பான மாதாந்த இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அந் நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகள் உள்ளடங்கலாக வருமானத்தை அறவீடு செய்வதற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மதிப்பிடப்பட்ட வருமானம் தொடர்பாக மாதாந்த இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு எடுக்கபட வேண்டிய நடவடிக்கைகள், அந் நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகள் உள்ளடங்கலாக வருமானத்தை அறவீடு செய்வதற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2020 ஆம் ஆண்டிற்காக | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கேபிஜ உள்ளடங்கலான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். இந் நிலைமையை சீர்செய்வதற்கு 2021 ஆண்டிற்காக கேபிஜ உள்ளடங்கலான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுகின்றதென அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 1 ஆம் பகுதி நி.பி. 756(6) | மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் 2021 மார்ச் 31 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் தலைமை அலுவலகம், மதுவரி ஆணையாளர் அலுவலகங்கள், மதுவரி அத்தியட்சகர் அலுவலகங்கள், விசேட செயற்பாட்டு பிரிவுகள் மற்றும் மதுவரி நிலையங்கள் உள்ளடங்கலாக 105 இடங்களிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் ஏறத்தாழ 3 மாத கால தாமதமொன்றுடன் 2021 யூன் 22 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்றுநோய் காரணமாக இத் திணைக்களத்தின் பல பிராந்திய அலுவலகங்கள் தற்காலிகமாக மூடப்பட்டிருந்ததுடன் அச் செயற்பாடுகளில் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதில் இடையூறுகள் ஏற்பட்டதால் பொருள் மெய்மையாய்வை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. எனினும் பொருள் மெய்மையாய்வு தற்போது அதன் இறுதிக் கட்டங்களில் உள்ளதுடன் உரிய அறிக்கைகளை விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 1 ஆம் பகுதி, நி.பி. 756(6) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச | அரச நிதிகளை கட்டுக்காப்பில் வைத்துப் பாதுகாப்பது தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தராக | திணைக்களத்தின் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களால் பிணை வைப்பை | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 9 |

| | | | |
|---|---|---|---|
| நிதிச் சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தி நி.பி. 31, நி.பி. 880 மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல் சட்டத்தின் 612 ஆம் அதிகாரம் | ஒவ்வொரு திணைக்கத்தினதும் தலைவர் பிணை வைக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் மதுவரி திணைக்களத்தால் மீளாய்வாண்டு வரையிலும் அவ்வாறு பிணைகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்வதற்கு தேவையான ஒழுங்குகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. | ஆம் பந்தி நி.பி. 31, நி.பி. 880 மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல் சட்டத்தின் 612 ஆம் அதிகாரம் என்பவற்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.8 வங்கி கணக்கை செயற்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 7041628 ஆம் இலக்க வங்கி கணக்கிற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் மாத வங்கி இணக்கக்கூற்றிலான சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் 6 மாத காலத்திற்கு மேலாக கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ரூபா 486,373 பெறுமதியான 35 காசோலைகள் தொடர்பாக நி.பி. 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 06 மாதங்களிற்கு மேலாக சமர்ப்பிக்கப்பட்ட காசோலைகள் தொடர்பாக நி.பி. 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு துரிதமாக செயற்படுவோம். | நி.பி. 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொலைநோக்கும் செயற்பணியும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மது வரித் திணைக்களத்தின் நோக்கங்கள் மற்றும் பிரதான பணிகள் சுகாதார அமைச்சினதும் ஏனைய நிறுவனங்களின் விடயப் பரப்பின் கீழும் எடுக்கப்படுவதால் சரியாக இனங்கண்டு அதற்கு இணங்கும் வகையில் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை திருத்தம் செய்து கொள்வது தொடர்பில் கவனம் | தயாரிக்கப்பட்டிருந்த வரைவினை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரச கணக்குகள் செயற்குழுவின் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

செலுத்தப்பட்டிருந்ததுடன் திணைக்களத்தின் அனைத்து பதவியணியினரின் கருத்துக்கள் மற்றும் ஆலோசணைகள் கலந்துரையாடப்பட்டு திருத்திய வரைவொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் இதுவரை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றுலா கப்பல் நடவடிக்கைகளுக்கான மதுவரி அனுமதிப்பத்திர சுற்றுலா சேவைகளின் கீழ், “சுற்றுலா கப்பல் செயற்பாடு சேவைகளுக்காக அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யாத தனியார் கம்பனியொன்றில் செயற்படும் 8 கப்பல்களுக்காக 11 வெ.கு மதுவரி அனுமதிப்பத்திரம்ங்கள் (உணவக அனுமதிப்பத்திரங்கள்) வழங்க திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. அதன்படி, 5 கப்பல்கள் வ/ப வர்த்தக மற்றும் கப்பல் கம்பனியில் பதிவு செய்யப்பட்டமைக்கான எந்த உறுதிப்படுத்தல்களையும் சமர்ப்பிக்கவில்லை. பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்திருந்த கப்பல்களில் இரண்டு கப்பல்களுக்கான காலம் 2019 பெப்ரவரி 11 ஆந் திகதி மற்றும் 2019 மே 02 ஆந் திகதி காலாவதியாகியிருந்தன. வரையறுக்கப்பட்ட வர்த்தக மற்றும் கப்பல் கம்பனியின் கீழ் வர்த்தக கப்பல்கள் சரக்குகளை கொண்டு செல்வதற்காக இந்த கப்பல்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. கப்பல் செயற்பாட்டிற்காக மதுவரி அனுமதிப்பத்தரங்கள் வழங்குவது தொடர்பாக மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் விதிகளைத் தயாரிப்பதும் | 2019.03.23 மற்றும் 24 ஆந் திகதிகளில் வெலிகம நகர மண்டபத்தில் நடைபெற்ற என்டர்பிரய்சஸ் ஶ்ரீ லங்கா வேலைத் திட்டத்தின் போது கௌரவ நிதியமைச்சரால் வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் மது வரி நிலைய உத்தியோகத்தர், மதுவரி அத்தியட்சகர் மற்றும் உதவி மதுவரி ஆணையாளரால் வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் இந்தத அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. புதிய மதுவரி அனுமதிப்பத்திரங்கள் சுற்றுலா மேம்படுத்தலை நோக்கி சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையால் பரிந்துரைக்கப்படும் இடங்களுக்காக மாத்திரமாக இருப்பதால் இந்த கப்பல்களுக்காக சுற்றுலா அபிவிருத்தி | சுற்றுலா கப்பல்களை செயற்படுத்துவதற்காக மது வரி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு உரிய மதுவரி கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் விதிகளை தயாரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட வில்லை. | அதிகாரசபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு உட்பட்டு இந்த அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. | |
| (ஆ) | பாதுகாப்பு ஸ்டிகர் முகாமைத்துவ முறைமை | | |
| | அரசின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக மதுபான போத்தல்கள் மற்றும் மதுபான போத்தல்களுடன் அண்மித்த உற்பத்திகளுக்கான ஸ்டிகர் வழங்குதல் மற்றும் பாதுகாப்பான ஸ்டிக்கர் முகாமைத்துவ முறையொன்றை வழங்குதல் மற்றும் ஸ்தாபித்து பேணிச் செல்வதற்காக 2019 யூன் 20 ஆந் திகதிய 2128/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மற்றும் மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2019 ஆம் இலக்க நிதி அமைச்சரினால் விநியோகிக்கப்பட்ட விதிகளின் பிரகாரம் 2019 யூலை 20 ஆந் திகதி முதல் வெளிநாட்டு மதுபானங்களுக்காக ஸ்டிகர் இடுதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது, நிதியமைச்சரால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் விநியோகிக்கப்பட்ட 04 மதுவரி அறிவித்தல்களின் மூலம் உள்நாட்டு மதுபானத்திற்காக ஸ்டிகர் இடல் 2021 யூன் 30 ஆந் திகதி வரை காலம் நீடிக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டு முதல் மீளாயவாண்டின் இறுதி வரை வெளிநாட்டு மதுபானங்களுக்காக ஸ்டிகர் விற்பனை மூலம் ரூபா 10.87 மில்லியன் வருமானமொன்று அறவிடப்பட்டிருந்ததுடன் ஸ்டிகர் கொள்வனவு செய்வதற்காக அக்காலப்பகுதிக்கு உரியதாக ரூபா 5.98 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்திற்காக மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 1,782 மில்லியனாக இருந்த போதும் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 5.98 மில்லியனான அதாவது 0.3 சதவீதம் மாத்திரமாக இருந்தது, இச்செயற்திட்டம் இதுவரை வெளிநாட்டு மதுபானங்களுக்கு மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது, உள்நாட்டு மதுபானங்களுக்காக | சில பிரதான மதுபான உற்பத்திக் கம்பனிகளால் ஸ்டிக்கர் விற்பனை நடைமுறைமைக்கு பதிலாக டிஜிட்டல் தொழில் நுட்பத்தின் மூலம் ஸ்டிகர் அச்சிடும் நடைமுறையை பயன்படுத்துவதற்கு நடைமுறையொன்றை தயாரிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது, அதன் பிரகாரம் முன்னர் மதுபானத்தை உற்பத்தி செய்த கம்பனிகளுக்கு டிஜிடல் தொழில்நுட்ப முறைமையை பயன்படுத்த முடியாததால் டிஜிடல் தொழில்நுட்பம் மற்றும் ஒட்டுவதற்கு முடியுமான வகையில் நிதி அமைச்சினால் 20201 பெப்ரவரி 25 ஆந் திகதி 07/2021 மதுவரி அறிவித்தல் விநியோகிக்கப்பட்டது. அதன் மூலம் 2021 யூன் 30 இல் உள்ளவாறு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மதுபானத்தின் பேரில் மேற்படி நடைமுறைகளைப் பயன்படுத்தி ஸ்டிகர் ஒட்டப்பட வேண்டுமென கட்டளை | உரிய காலப்பகுதியில் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கம்பனியுடன் இணக்கப்பாட்டிற்கு வருவதற்காக 18 மாத காலம் கடந்திருந்தமை மற்றும் பிரதான உற்பத்திக் கம்பனிகளால் டிஜிடல் தொழில் முறைமையை செயற்படுத்தும் தேவைப்பாட்டினை சுட்டிக் காட்டியிருந்தமை, புதிதாக அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டியிருத்தல், வழங்குனருடன் பாதுகாப்பு ஸ்டிகருக்காக பெறுகை மேற்கொள்ளப் பட்டிருந்தமை காரணமாக மீண்டும் பெறுகை செய்வதற்கு தேவைப்பாடு காணப்படுதல் அதன் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுகை செயற்பாடுகளில் விடயப் பரப்பினை திருத்தம் செய்தல் மற்றும் புதிய உடன்படிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற தேவைகளை மேலும் நிறைவேற்ற வேண்டியிருந்தது.

இடப்பட்டிருந்தது. மேலும் கேள்வி நிபந்தனைகளுக்கு தேவையான சந்தர்ப்பங்களில் இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டின் பேரில் ஸ்டிகர்களில் ‘ மாற்றப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மீண்டும் பெறுகை செயற்பாடுகளை மேற்கொள்ளும் தேவைப்பாடு எழவில்லையென தயவுடன் அறிய தருகின்றேன்.

(இ) **கணனி மென்பொருள்**

**முறைமை**

திணைக்களத்தின் மது வரி வருமானம் கணக்கிடல் செயன்முறையைத் திருத்துவதற்கான கணனி மென்பொருள் முகாமையொன்று செயற்படுத்துவதற்காகத் திணைக்களத்தினால் 2016 ஆம் வருடத்திலிருந்து 2018 ஆம் வருடம் வரையில் வரவு செலவுத்திட்ட ஒதுக்கங்கள் மற்றும் குறை நிரப்பு ஒதுக்கங்களின் மூலம் ரூபா 87.2 மில்லியன் ஒதுக்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் செயற்படுத்தப்படவில்லை. 2019 ஆம் வருடத்திற்காக ரூபா 0.745 மில்லியன் மற்றும் மீளாய்வாண்டின் ரூபா 3.4 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன் வரியைக் கணிப்பிடும் செயன்முறை திருத்துவதற்காக முன்மொழியப்பட்ட கணனி

கணனி மென்பொருள் முறைமையின் நடவடிக்கைகளைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகள் தற்போது விரைவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் பிரகாரம் முன்மொழியப்பட்ட கணனி மென்பொருள் முறைமையின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பிட்ட காலப்பகுதியில் செயற்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கான நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | மென்பொருள் முறைமையில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் இற்றை வரை நிறைவேற்றப்படாமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | **ஒன்றிணைந்த கணனி தரவு முறைமை**<br><br>சுங்கத்திணைக்களம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள கணனி தரவு முறைமையொன்று அமைத்தல் மற்றும் விரைவில் செயற்படுத்தல் மற்றும் கடிதப் பரிமாற்றம் மூலம் ஒன்றினைந்த செயற்திட்டமொன்று செயற்படுத்தப்படுவதாக 2019 மற்றும் 2020 கணக்கு குழுக்களின் கூட்டத்தில் குழுவினால் அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. எனினும், அது சம்பந்தமான பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டமை மதுவரித் திணைக்களம் மற்றும் குறிப்பிட்ட நிறுவனத்துடன் ஒன்றினைக்கப்பட்டு கணனி தரவு முறைமையொன்று தயாரித்தல் புதிய முகத்தின் கீழ் மொரட்டுவப் பல்கலைக்கழகத்தின் கணனி அறிவியல் பொறியியல் ஆலோசனைச் சேவையைப் பெறுவதற்கு உரிய கட்டணம் செலுத்துவதற்கான நிதி முன்மொழிவு மதிப்பீட்டு கட்டத்தில் இருந்தது. | ஆலோசனைச் சேவைக்காகக் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய தொகுதி மீண்டும் திருத்தங்களுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br><br>(RASED) முறைமையின் மாதிரிகளை இனங்காண்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்நடவடிக்கை நடைபெற்று வருகின்றது. அமைச்சின் பெறுகை நிபுணர் ஒருவரின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>திணைக்கள அடிப்படைத் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளைப் பெறுவதற்கு ICTA நிறுவனத்துடன் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.<br><br>திணைக்களத்தின் தகவல்கள்<br><br>உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் RAMIS முறைமை மற்றும் தகவல் பரிமாற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.<br><br>சுங்கத் திணைக்களத்தின் | குறிப்பிட்ட காலப்பகுதியில் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தரவுகள் மற்றும் மதுவரித் திணைக்களத்தின் தரவுகளைப் பரிமாற்றிக் கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | கட்டிடங்கள் திணைக்களத்திற்கு ஒதுக்கங்கள் வழங்கப்பட்டதன் பின்னர் இவர்களது மேற்பார்வையின் கீழ் பிரதேசச் செயலகத்தின் நிர்மாணம் தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன் 2019 ஆம் வருடத்தின் செலவுகளுடன் ஒப்பிடும் போது அம்பாறை நிர்மாணச் செயற்திட்டத்தில் மீளாய்வாண்டின் போது எவ்வித நிதி முன்னேற்றமொன்றும் இல்லாமை அவதானிக்கப்பட்டது. அது 2018 சனவரி 15 ஆந் திகதி முடிக்கப்பட வேண்டியிருந்ததுடன் 3 வருடங்களுக்குப் பிறகும் முடிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.<br><br>மேலும் பருத்தித்துறை மற்றும் முல்லைத்தீவு நிர்மாணத்திட்டங்கள் முறையே 2020 ஏப்ரல் 14 மற்றும் 2020 பெப்ரவரி 08 ஆந் திகதி முடிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் நிதி முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. மதுவரித் திணைக்களத்தின் சார்பில் மேற்குறிப்பிடப்பட்ட திட்டங்களின் மேற்பார்வைக்காக தொழில்நுட்ப அதிகாரி ஒருவர் ஆட்சேர்க்கப்படுதலானது மீளாய்வாண்டின் இறுதி வரையில் மேற்கொள்ளப்படவில்லை. | தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் போது சரியான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு மற்றும் அது தொடர்பாக கருத்திற் கொள்வதற்காக அதிகாரிகள் அறிவுறுத்தப்படுவதற்கு உள்ளகச் சுற்றறிக்கை மூலம் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக தயவுடன் தெரிவிக்கின்றேன். | குறிப்பிட்ட காலப்பகுதியில் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | **திணைக்களத்திற்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடம்**<br><br>காணி தொடர்பான பதிவேட்டின் மதுவரித் திணைக்களத்திற்குச் சொந்தமான அலுவலகங்கள் அமைந்துள்ள 43 காணிகள் காணப்பட்டதுடன் அவற்றில் திணைக்களத்தின் தலைமைக் அலுவலகம் அமைந்துள்ள காணி உட்பட 23 காணிகளுக்கு உரிய விடுவிக்கப்பட்ட உறுதிகள் பெறப்படுதல் அல்லது அரசின் காணிகள் கையேற்கும் நடவடிக்கைகள் இற்றை வரையில் முடிக்கப்படவில்லை. | ராஜகிரிய தலைமை மதுவரி அலுவலகம் அமைந்துள்ள காணியைக் கையேற்பதற்கு காணி அமைச்சினால் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டவுடன் கையேற்பதற்காக நடவடிக்கைகள் முடிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. உரிய விசாரணைகளை விரைவில் மேற்கொண்டு முடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.<br><br>பிரதேச செயலகங்களின் காணிகளுக்கு உரிய விடுவிக்கப்பட்ட உறுதிகளைப் பெறுதல் அரசின் காணிகளைக் கையேற்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போதுள்ள கொவிட் 19 தொற்று நோய் மற்றும் மதுவரித் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பிரிவுகளினால் தாமதமாகின்றன எனினும் 2021.12.31 இற்கு முன்னர் இந் நடவடிக்கையை முடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | காணிகளுக்கான விடுவிக்கப்பட்ட உறுதிகளைப் பெறுதல் மற்றும் அரசின் காணிகளைக் கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (எ) | 2014 ஆம் வருடத்திலிருந்து 2020 ஆம் வருடம் வரையில் சேகரிக்கப்பட்ட தேறிய மதுவரி வருமானத்தின் முன்னேற்றம் / பற்றாக்குறை தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்படுகின்றன. | 2016 ஆம் வருடத்தில் அரசின் வரிக்கொள்கையில் ஏற்பட்ட வேறுபாடு காணரமாக மதுவரி வருமானம் அதிகரித்ததாக இதற்கு முன்னர் உங்களால் அறிக்கையிடப்பட்டிருந்தது.<br>2017 ஆம் வருடத்தின் பின்னர் இந் நிலைமை வேறுபட்டது. | நி.பி 128 (2) இன் பிரகாரம் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சரியான வருமான மதிப்பீடு தயரிக்கப்படல் வேண்டும். |

மதுவரி வருமானம்

| வருடம் | ரூபா. பில்லியன் | சதவீத வேறுபாடு |
|---|---|---|
| 2014 | 69.08 | 4.6 |
| 2015 | 105.2 | 52.2 |
| 2016 | 120.2 | 14.2 |
| 2017 | 113.2 | (5.8) |
| 2018 | 113.8 | 0.5 |
| 2019 | 115.3 | 0.3 |
| 2020 | 120.9 | 4.8 |

(ஏ) **புகையிலை வரிச் சட்டத்தின் பிரகாரம் வரி அறவிடப்படாமை.**

1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்து சுருட்டுகள், பீடிகள் மற்றும் சகல புகையிலைக்கான ஒரு கிலோகிராமிக்கான வரியொன்று அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், உற்பத்தி செய்யப்பட்ட சுருட்டுகள் மற்றும் பீடி சம்பந்தமாகச் செய்யப்பட்ட மாதிரிக் கணக்காய்வின் போது அவ்வாறான வரியொன்று அறவிடப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. 2020 ஆம் வருடம் வரையில் 536 பீடி மற்றும் சுருட்டு உற்பத்தி நிறுவனங்கள் திணைக்களத்தின் பதிவு செய்திருந்ததுடன் கடந்த 4 வருடங்களுக்கு அந் நிறுவனங்களில் பீடி மற்றும் சுருட்டு உற்பத்தி அண்ணளவாக 16 பில்லியன் அலகுகள் மட்டுமே ஆகும். அந் நிறுவனங்களில் தற்போது கோரிக்கைப் பத்திரம் கட்டணம்,

இலங்கையின் உற்பத்தி செய்யப்பட்ட பீடி மற்றும் சுருட்டுக்களின் வரியொன்று அறவிடல் பொருத்தமானதாக பரிந்துரைக்கப்பட்டு ED/2019 மற்றும் 2019.08.26 ஆந் திகதி நிதி அமைச்சிற்கு காட்டப்பட்டுள்ளது. தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக அரச நிதிக்கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு செயலாளரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2020.10.15 ஆந் திகதிய கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அரச நிதிக் கொள்கைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் எதிர்காலத்தில்

1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | பீடி உற்பத்தி மற்றும் களஞ்சிய அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் நிறுவனங்களால் செய்யப்படுகின்ற புகையிலைக்காக வரித்தொகையொன்று மட்டுமே அறவிடப்படுகின்றது. கடந்த வருடத்தில் தெரிவு செய்யப்பட்ட 30 நிறுவனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வின் போது வருடாந்த பீடி உற்பத்தி 31,348,500 அலகுகள் ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் பதிவு செய்யப்பட்ட 536 நிறுவனங்களைக் கருத்திற் கொள்ளும் போது வருடாந்தம் அரசிற்கு அந்த உற்பத்திகளின் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய வரி வருமானமொன்று இழப்பு ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டது. | புகையிலை வரிச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஐ) | புகையிலை வரிச் சட்டத்தின் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகத் தற்போதைய நிலைமை தொடர்பான பரிசோதனையின் போது திருத்தப்பட்ட புகையிலை வரிக்கட்டளை 2018 யூலை 05 ஆந் திகதி சட்ட வரைவுகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. புதிய திருத்தங்களைச் செய்வதற்கு 1999 இன் 08 ஆம் இலக்க புகையிலைவரிச் சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லாமையால் அத் திருத்தங்கள் செய்யப்படுவதற்கு தற்போது நடைமுறையிலுள்ள புகையிலை வரிச்சட்டம் திருத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டு சட்ட வரைவுகள் திணைக்களத்தினால் 2019 செப்டெம்பர் 02 ஆந் திகதி அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு | கருத்துரை வழங்கப்படவில்லை. | 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தெரிவிக்கப்பட்டபோதிலும் மீளாய்வாண்டு வரையில் முன்னேற்றமொன்று அவதானிக்கப்படவில்லை. | | |
| (ஒ) | மதுவரித் திணைக்களத்தினால் சிகரட் நுகர்விற்காக மட்டும் கட்டுப்பாடொன்று மேற்கொள்ளப்பட்டது. பீடி குடிப்பதால் ஏற்படக்கூடிய புகை உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய நாட்பட்ட நோய்களுக்கு அவை காரணமாக அமைவது இனங்காணப்பட்டுள்ளதுடன் பீடி உற்பத்தியானது தொழிலாளரின் உற்பத்தி திறனைக் குறைக்கும் விளைவைக் கொண்டிருப்பதால் பீடி உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்தப்படுவதின் தேவைப்பாடொன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக பலத்த கவனம் செலுத்தப்படுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் அனைத்து உதவி மதுவரி ஆணையாளர், அனைத்து மதுவரி அலுவலகர்கள் மற்றும் அனைத்து மதுவரி நிலைய அதிகாரிகளுக்கு கடிதமொன்றின் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>2006 இன் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான நுகர்வுகளை கட்டுப்படுத்தலல் மற்றும் நிர்வகித்தல் மூலம் புகையிலை தொடர்பான பொருட்களால் ஏற்படும் சுகாதாரக் கேடுகளைக் குறைக்க மதுவரித் திணைக்களம் நடவடிக்கை எடுக்குமென்பதைத் தயவுடன் தெரிவிக்கின்றேன். | 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 வருடாந்தச் செயலாற்றல் அறிக்கை**

---

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் வருடாந்தச் செயலாற்றல் அறிக்கை 2021 யூன் 18 ஆந் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 3.4 பெறுகை

----------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ---------------------------------------------- | --------------- | ------------------------------------------------- |
| (அ) | மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டங்கள் மூன்று தயாரிக்கப்பட்டிருந்தன. அதில் இறுதிக் காலாண்டில் 07 மூலதன செலவு வியடங்கள் மற்றும் 08 மீண்டெழும் செலவு விடயங்களுக்கான பெறுகை நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையில் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டத்தின் முன்னேற்றம் தயாரித்த போது தவறுதலாக அந்தச் செலவு விடயங்கள் அனைத்திற்குமான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாக குறிப்பிடப்பட்டிருந்தது. சரியாகத் தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தின் முன்னேற்றம் இத்துடன் சமர்ப்பிக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் நிகழாமல் பார்த்துக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | பெறுகைத் திட்டம் மற்றும் காலக் குறிப்புக்களின் பிரகாரம் குறிப்பிட்ட பணிகள் முடிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பணியொன்றாக மதுவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் இலக்கம் 3, உதவி மதுவரி ஆணையாளர் அலுவலகம் 11, மதுவரி அதிகார சபை அலுவலகங்கள் 24 மற்றும் 52 மதுவரி நிலையங்களின் பல்வேறு வரம்புகளுக்கு 814 மதுபானங்களின் காரத்தை அளவிடும் உபகரணங்கள் மற்றும் 138 அளவிடும் சங்கிலிகள் தேவையென்று இனங்காணப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் பெப்ரவரி மாதம் இவ்வுபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும், பெறுகை நடவடிக்கைகளில் காணப்பட்ட தாமதத்தினால் மீளாய்வாண்டின் இறுதி | மதுபானங்களின் காரத்தை அளவிடும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்கான சந்தை விலைக்கோரல் முறையின் கீழ் விலை மனுக்கள் கோரப்பட்டது. கொவிட் 19 தொற்று நோய் காரணமாக இப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகள் மூடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டு மாதிரிப் பொருட்கள் வழங்கப்படாமை மற்றும் இருப்புக்கள் இல்லாமையால் கொள்வனவு செய்வதற்கு முடியாதிருந்தது. அவ்வப்போது விசாரிக்கப்பட்ட போதும் மேற்கூறப்பட்ட காரணமே குறிப்பிடப்பட்டது. கொவிட் தொற்றுக் காரணமாக உற்பத்தி நிறுவனங்கள் அமைந்துள்ள நாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்ய முடியாமையால் இந்த | பல்வேறு சமயங்களில் புளிக்கவைக்கப்பட்ட மது பானங்களின் மதுசாரத்தின் உள்ளடக்கத்தை நிர்ணயிப்பதற்கு மதுவரி நிலையங்களில் தரப்படுத்தப்பட்ட கருவிகள் இருப்பது கட்டாயம் என்பதுடன் அதற்காகத் திணைக்களத்தின் கவனம் விரைவில் கோரப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வரையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படவில்லை. | உபகரணங்களை கொள்வனவு செய்தல் தாமதமாகியது. இது திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஒரு விடயமென்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன் இந்த உபகரணங்களைத் தவறாமல் கொள்வனவு செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவிக்கிறேன். | |

**3.5 இழப்பீடுகள் மற்றும் நட்டங்கள்**

---------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த வருடத்தின் இலக்கம் PE-0677 ஆம் இலக்க வாகனத்தின் விபத்து தொடர்பில் ஏற்பட்ட நட்டம் ரூபா 707,155 ஆன தொகையில் ரூபா 536,771 ஆன தொகை மட்டுமே காப்புறுதி கம்பனியிடமிருந்து அறவிடப்பட்டிருந்ததுடன் அறவிடப்படாத ரூபா 170,384 ஆன தொகை குறித்த தவறிழைத்த தரப்பிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது பதிவழிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அது தொடர்பாக இழப்பீடு மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்றில் எவ்வித குறிப்புக்களும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வழக்கு நடவடிக்கைகள் முடிந்தவுடன் விபத்துடன் சம்பந்தப்பட்ட EP PC – 1010 வாகனத்தின் காப்புறுதி கம்பனியிடம் நட்டஈடு பெறப்பட்டு அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. சம்பந்தப்பட்ட பணிகள் விரைவாகவும் சரியாகவும் பின்பற்றப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.6 கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் வழங்கப்படாமை.**

---------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2020 கணக்காண்டிற்காக 15 கணக்காய்வு விசாரணைகள் அனுப்பப்பட்டிருந்ததுடன் அக்கணக்காய்வு அறிக்கைகளில் 06 | இக்கணக்காய்வு விசாரணைகள் 06 இல் 04 தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட காலத்திற்குள் பதில் அளிப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தரால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விசாரணைகளுக்கு பதில் வழங்குவதற்கு 3-6 மாத காலப்பகுதி எடுக்கப்பட்டிருந்தது. 6 மாதங்களுக்கு முன்னர் அனுப்பப்பட்ட 06 விசாரணைகளுக்கு இற்றை வரையில் பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | தொழிற்சாலை ஊழியர்களின் வருடாந்த இடமாற்றங்கள் மற்றும் கொவிட் தொற்றுநோய் காரணமாக சம்பந்தப்பட்ட அலுவலர்களை சம்பந்தப்பட்ட நிலையங்களுக்கு அழைத்து வருவதில் உள்ள சிரமம் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டதாக நான் கூறுகின்றேன். இவ்விசாரணைகளுக்கான பதில்கள் தற்போது எனக்கு கிடைத்துள்ளதுடன் அவற்றை விரைவில் உங்களுக்கு சமர்ப்பிப்பேன். எதிர்காலத்தில் இதுபோன்ற குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அனைத்து அதிகாரிகளுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதென்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஆ) | சட்ட விரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட ஸ்பிரிட்களைப் பயன்படுத்திய கம்பனியொன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட சுங்கப் பரிசோதனையின் போது 518,600 லீட்டர் இறக்குமதி செய்தமை தொடர்பாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் புலனாய்வுப் பிரிவினால் அனுப்பப்பட்ட கணக்காய்வு விசாரணையில் மேலதிக விடயங்களைத் தெளிவுபடுத்துமாறு 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதி SIN/A/PI//201902 ஆம் இலக்க விசாரணை மூலம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இற்றை வரையில் பதில் வழங்கப்படவில்லை. | இக்கணக்காய்வு விசாரணைக்காக தற்போப் பதில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அவை விரைவில் சமர்ப்பிக்கப்படும். | குறிப்பிட்ட காலத்திற்குள் பதில் அளிப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தரால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.7 முகாமைத்துவப் பலவீனங்கள்**

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாகாண உதவி மதுவரி ஆணையாளர் மற்றும் சுங்கவரி அதிகாரிகளினால் தமது மாகாணத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் கள்ளுப் போத்தல்களின் மாதிரியொன்று மூன்று மாதங்களுக்கொருமுறை பெறப்பட்டு இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு ஆனுப்பப்பட்டு அறிக்கை ஒன்று பெறப்படவேண்டிய போதிலும் இரத்தினபுரி இலக்கம் 1 மற்றும் இலக்கம் 02 ஆன கள்ளுத்தவறணைகளில் 2017 ஒக்டோபர் மாதத்தின் பின்னர் 2020 ஆம் வருடம் வரை மாதிரிகள் பெறப்பட்டு இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இற்றைவரையில் குறிப்பிட்ட பிரமாணத்தின் பிரகாரம் கள்ளு மாதிரிகள் இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட விதி முறைகளின் படி அறிக்கைகள் சேகரிக்கப்படுகின்றன. | சட்டங்கள் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உரிமதாரர்களாக செயற்படுகின்ற இருவரால் ர.பி 4 உரிமமொன்று 2013 ஆம் வருடத்திலிருந்து 2017 வருடம் வரையில் புதுப்பிக்கப்பட்டிருந்ததுடன் சத்தியக் கடதாசி மூலம் 2018 ஆம் வருடத்திலிருந்து ஒருவருக்கு உரித்துப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் 2015 திசெம்பர் 15 ஆந் திகதி 983 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் பிரகாரம் உரித்துப்பத்திரம் கையளிப்புக் கட்டணமாகிய ரூபா 15,000,000 ஆன பணம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது ரூபா 200,000 மட்டுமே அறவிடப்பட்டிருந்தது மதுவரி அறிவித்தல் இலக்கம் 926 இன் பிரகாரம் ரூபா 1,300,000 ஆன தொகையொன்று அறவிடப்பட்டதாக இது தொடர்பில் அனுப்பப்பட்ட கணக்காய்வு விசாரணைக்காக அனுப்பப்பட்ட பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது அதன் பிரகாரம் மேலும் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 13,500,000 ஆகும். | உரிமதாரருக்கு உரிய தொகையை செலுத்துமாறும் இல்லையென்றால் உரிமம் நீடிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் உரிமதாரர் மேன் முறையீட்டு நீதிமன்ற விதிகள் 187/2021 இன் கீழ் மேன்முறையீடு செய்து வழக்குத் தொடர்வதன் மூலம் உரிமத்தை நீடித்துள்ளார்.<br><br>அதன் பிரகாரம் வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் அடுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | மதுவரி அறிவித்தல் இலக்கம் 983 இன் பிரகாரம் குறிப்பிட்ட கட்டணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(இ) மேற்கொள்ளப்பட்ட கைப்பற்றல்கள்

| | | |
|---|---|---|
| மதுவரித் திணைக்களத்தினால் நிறைவேற்றப்படுவதற்காகக் கையளிக்கப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் கடந்த மூன்று வருடங்களில் மதுவரித் திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்ட (சுற்றிவளைப்பு) குற்றங்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைவடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. மேலும் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் விஷம், அபின் மற்றும் அபாயகரமான போதைப் பொருள்சட்டம், புகையிலை வரிச் சட்டம், புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபை சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை முறையே 3277 ஆல், 1934 ஆல் மற்றும் 654 ஆல் அதாவது நூற்றுக்கு 39 வீதம், நூற்றுக்கு 50 வீதம் மற்றும் நூற்றுக்கு 44 வீதங்களால் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விபரங்களை மீள் பரிசீலனை செய்ய வேண்டியதன் காரணமாகவும் மற்றும் அதற்காக குறிப்பிட்ட அதிகாரிகள் தீவு முழுவதும் உள்ள பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக இந்த நாட்களில் சேவைக்கு சமூகமளிக்காத காரணத்தினால் பதில்களை வழங்குவதற்கு காலம் தேவைப்படுகின்றது. | குறிப்பிட்ட சட்டங்களினால் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மதுபானம், புகையிலை மற்றும் மது மற்றும் விஷம், அபின் மற்றும் ஆபத்தான மருந்துகள் போன்ற சட்ட விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | உரிமம் பெற்ற 23 மதுபான தொழிற் சாலைகளில் அரச வருமானத்திற்கு மிகச் சிறிய பங்களிப்புச் செய்யும் 6 உற்பத்தி நிறுவனங்கள் மீதான மதுவரித் திணைக்களத்தின் ஒழுங்கு முறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்திறன் மதிப்பீட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட செயலாற்றல் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முக்கிய அவதானிப்புக்களின் சுருக்கம் கீழே காட்டப்படுகின்றது.<br><br>(i) பதிவேடுகளுக்கிடையிலான முரண்பாடுகள், தொழிற்சாலைப் புத்தகங்களில் உள்ள தகவல்களை நீக்குதல், வெட்டுதல், உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்ற ஸ்பிரிட் அளவு மற்றும் ஒப்பீட்டளவில் அரக்கு உற்பத்தி அறிக்கையிடப்படாமை, லொட்ஜ்களுக்கு மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் போது மாற்றப்பட்ட அளவு மற்றும் மாற்றப்பட்ட லொட்ஜ்களுக்கு கிடைத்த அளவு தொடர்பாகப் போதியளவில் வேறுபாடுகள் காணப்பட்டமை, ஸ்பிரிட் போக்குவரத்திற்கான அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட அளவு மற்றும் பதிவேட்டிலுள்ள அளவு என்பவற்றுக்கிடையே முரண்பாடுகள் அவதானிக்கப்பட்டன.<br><br>(ii) கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட 8 மதுபானச்சாலைகள் / தொழிற்சாலைகள் தொடர்பாக தனித்தனியாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் மாதிரிகள் பெறப்பட்டு அவை அரசின் இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பட்டு பகுப்பாய்வு அறிக்கை பெறப்பட்டு அவை குறிப்பிட்ட நியமங்களுக்கேற்ப இருக்கின்றனவா என்பதைப் பரிசோதிப்பதற்காக குறிப்பிட்ட தவணைகளில் அறிக்கை பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை, பெறப்பட்ட மாதிரிகள் தாமதாமாகி இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பட்டமை, இரசாயனப் பகுப்பாய்வரின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட | கருத்துரை வழங்கப்படவில்லை. | குறித்த அவதானிப்பு தொடர்பான பரிந்துரை செயற்படுத்தப்படல் வேண்டும். |

அளவு மற்றும் பதிவேட்டின் குறிப்புக்களுக்கும் இடையிலான வேறுபாடு காணப்பட்டமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(iii) சட்ட விரோதமாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மதுவரி மற்றும் சுங்கவரி செலுத்தாது இறக்குமதி செய்யப்பட்ட ஸ்பிரிட்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற மதுபானங்கள் சந்தையில் பரவலாகப் புழக்கத்தில் இருப்பதை கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் விசாரணை மற்றும் சுங்க விசாரணைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(iv) தொழிற்சாலைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய அரச வரி வருமானத்தைப் பாதுகாப்பதற்காக அதிகாரிகள் முன்னிலை வகிக்க வேண்டும் மற்றும் லேபிள்கள், மூடி மற்றும் போத்தல்களின் பயன்பாடு மற்றும் அந்த மூலப்பொருட்களுடன் உற்பத்தியின் உறவைப் பகுப்பாய்வு செய்தல், திணைக்களத்தில் ஒரு ஆய்வகத்தை அமைப்பதன் மூலம் பகுப்பாய்வு நடவடிக்கைகளை எளிதாக்குவதற்குத் தேவையான செயற்பாடுகள் எடுக்கப்படவில்லை.

மேற்காட்டப்பட்ட அவதானிப்புக்கள் சம்பந்தமாக செயற்படுத்தப்பட வேண்டிய 19 பரிந்துரைகள் அறிக்கை மூலம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்காகத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்விற்கு அறிக்கையிடப்படவில்லை.

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்.

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான நிகழ்ச்சி நிரல் 2030 இன் பிரகாரம் மதுவரி திணைக்களத்தின் நோக்கங்கள் 15 இற்கு உரிய அடைந்து கொள்ளப்பட வேண்டிய 37 இலக்குகள் மீளாய்வாண்டில் இனங் காணப்பட்டிருந்த போதிலும் அவை திணைக்களத்தின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு ஒழுங்காக வடிவமைக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை மதுவரித் திணைக்களம் 2020 ஆம் வருடத்தில் நிலை பேறான அபிவிருத்தி நோக்கங்கள் 17 இல் 15 இற்கான அதன் தூர நோக்கு, உத்திகள் மற்றும் செயற்பாடுகளை கோடிட்டுக் காட்டியிருந்தது.<br><br>ஆனால் பின்னர் மேலும் கவனம் கோரப்பட்ட போது இலங்கை மதுவரித் திணைக்களம் 04 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை தெளிவாக இனங்கண்டு அதன் பிரகாரம் 2021 ஆம் வருடத்தில் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் குறிப்பிட்ட செயற்பாடுகளையும் வரிசைப்படுத்தவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.<br><br>இலங்கையில் எந்தவொரு நிறுவனத்திற்கும் 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவது நடைமுறைக்கு மாறானது என்பதை உணர்ந்த பின்னர் மேற்கண்ட அபிவிருத்தியை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததாக அதன் பிரகாரம் அனைத்துப் பிரிவுகளிலும் செயற்பாடுகள் தெளிவாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | நோக்கங்களை இனங்கண்டு இலக்குகளை அடைந்து கொள்வதற்குத் தேவையான ஒதுக்கங்களை ஏற்படுத்தி செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்படுதல் மற்றும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் முன்னேற்றம் பரிசோதிக்கப்பட்ட போது மூன்று நோக்கங்களுக்கான மூன்று இலக்குகள் எவ்வித முன்னேற்றத்தையும் அறிக்கையிடப்படவில்லை. மேலும் ஏழு நோக்கங்களுக்கான ஒன்பது இலக்குகளின் முன்னேற்றம் நூற்றுக்கு 50 வீதத்திற்கும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | 2020 ஆம் வருடத்தின் மார்ச் 18 இலிருந்து வருடம் முழுவதும் காணப்பட்ட கொவிட் 19 தொற்று நோய் காரணமாக வருமானப்பிரிவு, சட்டம் அமுலாக்கல் பிரிவுகாரணமாக வருமானப் பிரிவு, விநியோக ஒழுங்குமுறை பிரிவு, மனித வளப் பிரிவு போன்ற பிரிவுகளில் கடுமையான பிரச்சினைகள் ஏற்பட்டிருந்ததுடன் முன்னேற்றத்தினை கொவிட் 19 தொற்று நோய் கடுமையாகப் பாதித்திருந்தது. இவற்றில் கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவுகளின் ஆராய்ச்சி நடவடிக்கைகளிலும் மனிதவளப் பிரிவில் பயிற்சிக் கற்கை நெறிகளுக்கான நடவடிக்கைகளிலும் சட்ட அமுலாக்கல் பிரிவில் இத்தாக்கம் மிகவும் வலுவாகவும் தாக்கமளித்திருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்தை அடைந்து கொள்ளல் வேண்டும். |

**5. நல்லாளுகை**

-------------------------

**5.1 உள்ளக கணக்காய்வு**

-----------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான உள்ளக கணக்காய்வுப் பிரிவானது 8 விசாரணைகள் மூலம் தமது அவதானிப்புக்களைக் குறித்துக் காட்டியுள்ளது. அதன் பிரகாரம் உள்ளக கட்டுப்பாட்டு | மீளாய்வாண்டிற்குரிய உள்ளக கணக்காய்வுப் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்விற்கான அறிக்கை அந்தந்த குறிப்பிட்ட பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டு | குறைபாடுகளைத் திருத்துதல் மற்றும் கட்டுப்பாட்டு முறைகளிலான பலவீனங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| முறைமையில் குறைபாடுகள் திருத்தப்பட வேண்டியமை மற்றும் நிதி மற்றும் செயற்பாட்டுச் செயலாற்றலின் குறைபாடுகள் திருத்தப்பட வேண்டியமை தொடர்பாக நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட செயன்முறைகள் கணக்காய்விற்கு அறிக்கையிடப்படவில்லை. | குறிப்பிடப்பட்டுள்ள உள்ளக கட்டுப்பாட்டின் பலவீனங்களை குறைத்துக்கொள்ளல் மற்றும் நிதிச் செயலாற்றலின் குறைபாடுகளைத் திருத்துதல் என்பன பிரிவுத் தலைவர்களினூடாக மேற்கொள்ளப்படும். அதற்கு மேலதிகமாக இது தொடர்பாக காணப்படும் சிக்கல்கள் மூன்று மாதங்களுக்கு தடவை நடாத்தப்படுகின்ற திணைக்களத்தின் கண்ககாய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாக்கப்பட்டு அவற்றைத் தீர்த்துக் கொள்வதுடன் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றங்கள் மீளாய்வு செய்யப்படும். | |

## 6. மனித வளங்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினருடன் ஒப்பிடும் போது 316 பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. | அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வெற்றிடங்கள் காணப்படுகின்ற 02 மதுவரி ஆணையாளர் பதவிகள், 02 பிரதி மதுவரி ஆணையாளர் பதவிகள், மற்றும் உதவி மதுவரி ஆணையாளர் பதவிக்காக 2021.03.29 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தக்கூடிய வகையில் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. | தேவையைக் கருத்திற் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை ஆட்சேர்ப்புதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் பல்வேறு காரணங்களினால் வேலை நீக்கம் செய்யப்பட்ட 48 அதிகாரிகளில் 20 அதிகாரிகள் தொடர்பாக வருடம் 01 தொடக்கம் 03 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக குறிப்பிட்ட ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகள் முடிக்கப்படவில்லை. | வேலை நீக்கம் செய்யப்பட்ட 48 அதிகாரிகளில் இலஞ்சம் மற்றும் ஊழல் திணைக்களத்தின் மற்றும் உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டன. வழக்குத் தொடரப்பட்ட அதிகாரிகள் தவிர்ந்த ஏனைய அதிகாரிகளின் ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. | முறையான வகையில் ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகள் மடிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |